**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-5 | Date | : 08.10.2025 |
| Case No. | : O.S.494/2019 | Nationality | : Indian |
| Name | : பாலு | Religion | : |
| Father's/Husband's Name | : சின்னையன் | Age | : 57 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.5</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. புல எண்.230/2 ல் 4 மாவுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதில் கோயில் நிலம் 100 குழி உள்ளது. தாவா சொத்தை எப்போது யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. கோவிந்தராஜிக்கு 2 மனைவிகள். கோவிந்தராஜ் எப்போது இறந்தார் அவர் மனைவி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. ராமலிங்கத்தை எனக்கு தெரியும். கோவிந்தராஜின் தம்பிதான் ராமலிங்கம். ராமலிங்கத்தின் மகன்தான் சதீஷ்குமார். வழக்கின் வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் காவேரி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் தேவமங்கலம் என்றால் சரிதான். தேவமங்கலத்திற்கும் துகிலி கிராமத்திற்கும் சுமார் 35 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் பட்டா, சிட்டா ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை வாதிகள் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள்.

சதீஷ்குமாரின் தகப்பனார் ராமலிங்கம் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொன்னார்கள். நானும் வாதியும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. வாதி அரசியல் கட்சியில் இல்லை. எனக்கும் சதீஷ்குமாருக்கும் உழவு சம்மந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த உரிமையில் கிடையாது என்றால் சரிதான். வழக்கு சொத்து தற்போது தரிசு நிலமாக உள்ளது என்றால் சரிதான். வழக்கு போடுவதற்கு முன்பு வாதிகள் பயிர் செய்து வந்தார்கள். வழக்கு சொத்தில் எந்தெந்த பசலியில் என்னென்ன பயிர் செய்தார் என்ற விவரத்தை கூற இயலாது என்றால் சரிதான். சதீஷ்குமாருக்கு இந்த வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்று நான் சொல்வதற்கு உரிமையில்லை என்றால் சரிதான். அஜித்குமார் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதவராக நான் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeshwari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).